பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

14 09 2024 6 30
சனிக்கிழமை மாலை

தலைப்புச் செய்திகள் -

1. ஊழலை முற்றிலும் அகற்ற வேண்டும் எனபதே பிஜேபி தலைமையிலான மத்திய அரசின் நோக்கம் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. விவசாயிகளின் நலனுக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருவதாக வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.
3. மறைந்த முன்னாள் முதலமைச்சர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு தமிழக காவல்துறை மற்றும் சீருடை பணியாளர்கள் 129 பேருக்கு அண்ணா பதக்கங்களை மாநில அரசு அறிவித்துள்ளது.
4. தமிழகத்தில் நடப்பு ஆண்டில் 40 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாநில உணவுத்துறை முதன்மை செயலாளர் டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.
5. ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் ----*

**[]<<<>>>[]**

ஊழலை முற்றிலும் அகற்ற வேண்டும் என்ற நோக்கில் பிஜேபி தலைமையிலான மத்திய அரசு செயல்பட்டு வருவதாக அக்கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமேடி தெரிவித்துள்ளார்.

ஜம்மு-கஷ்மீரின் தோடாவில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், எதிர்க்கட்சிகள் வாரிசு அரசியலுக்கு முக்கியத்துவம் அளித்து வருவதாக குற்றம்சாட்டினார்.

கடந்த 60 ஆண்டுகளில் முதல் முறையாக தொடர்ந்து மூன்று முறை மத்தியில் ஆட்சி அமைக்கும் வாய்ப்பை தமது கூட்டணிக்கு மக்கள் வழங்கி இருப்பதாக அவர் தெரிவித்தார்.

சாதாரண மக்களின் நலனில் அரசு செலுத்தி வரும் அக்கறையே இதற்குக் காரணம் என்று அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சிகள் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகி இருப்பதுடன், பிரிவினைவாதம், தீவிரவாதம் போன்றவற்றுக்கும் ஆதரவாக செயல்படுவதாக திரு நரேந்திரமோடி குற்றம்சாட்டினார்.

[]<<<>>>[]

வேளாண்மை மற்றும் விவசாயிகளின் நலனுக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருவதாக வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.,

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சுத்திகரிக்கப்பட்ட சமையல் எண்ணெய்களுக்கான இறக்குமதி வரி தொடர்பான முடிவு கடுகு, சூரியகாந்தி போன்றவற்றின் தேவையை அரிகரிக்கும் என்று கூறியுள்ளார்.

இது விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதை உறுதி செய்வதுடன், கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புகளையும் அதிகரிக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

வெங்காயத்தின் மீதான ஏற்றுமதி வரி 40 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது, வெங்காய விவசாயிகளுக்கு லாபகரமாக அமையும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

விவசாயிகள் மட்டுமன்றி இது தொடர்பான துணைத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் இது பயனளிக்கும் என்று திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

ஓணம் பண்டிகை நாளை கொண்டாடப்படுவதையொட்டி முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மலையாள மொழி பேசும் கேரள மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமத்துவம், சகோதரத்துவத்தின் வெளிப்பாடாக ஓணம் கொண்டாடப்படுவதாக அவர் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பெருமழையால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து கேரளா மீண்டுவர இந்த ஓணம் பண்டிகை ஊக்கம் அளிக்கட்டும் என திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மேற்கொண்ட அமெரிக்க பயணத்தின்போது மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அனைத்தும் முதலீடுகளாக மாறி வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும் என மாநில தொழில்துறை அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் 31 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் ஒன்பது லட்சத்து 74 ஆயிரம் கோடி மதிப்பில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சரின் அமெரிக்க பயணத்தின்போது தமிழகத்தில் உறுதியாக பணிகளை தொடங்கும் நிறுவனங்களுடன் மட்டுமே ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திரு டி ஆர் பி ராஜா கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் கோவில் திருப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருவதாக மாநில இந்து அறநிலையத்துறை அமைச்சர் திரு சேகர் பாபு கூறியுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் அருள்மிகு பவானியம்மன் திருக்கோவிலில் தங்கத் தேர் வெள்ளோட்டத்தில் அவர் இன்று பங்கேற்றார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், நாளை மாநிலம் முழுவதும் 101 திருக்கோவில்களில் குடமுழுக்கு நடைபெறவுள்ளதாகக் கூறினார்.

*( சவுண்ட்பைட் - சேகர்பாபு ) -48---- செகண்ட்*

**[]<<<>>>[]**

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை தொடர்பான முன்னேற்பாட்டு பணிகளை முழுவீச்சில் மேற்கொள்ள வேண்டுமென மாநில அரசின் தலைமைச் செயலாளர் திரு முருகானந்தம் அதிகாரிகளை கேட்டுக் கொண்டுள்ளார்,

இது தொடர்பான ஆய்வுக் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று நடைபெற்றது.

கூட்டத்தில் பேசிய அவர், மாவட்ட ஆட்சியர்கள் மண்டல அளவிலான பல்துறை ஒருங்கிணைப்பு ஆய்வுக் கூட்டங்களை நடத்த வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

குடியிருப்போர் நலச்சங்கங்களுக்கான விழிப்புணர்வு மற்றும் பேரிடர் ஆயத்தங்கள் குறித்த கூட்டங்களும் நடத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

பேரிடர் மீட்புப் படையினரை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டுமென்றும் திரு முருகானந்தம் அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

மறைந்த முன்னாள் முதலமைச்சர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு தமிழக காவல்துறை மற்றும் சீருடை பணியாளர்கள் 129 பேருக்கு அண்ணா பதக்கங்களை மாநில அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், காவல்துறையைச் சார்ந்த 100 பேர், தீயணைப்புத் துறையைச் சார்ந்த பத்து பேர், சிறைத்துறையில் பத்து பேர், ஊர்க்காவல் படையில் ஐந்து பேர், விரல் ரேகை பிரிவில் இரண்டு பேருக்கும் இந்த விருதுகள் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர கடந்த ஆண்டு தாமிரபரணி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போது மீட்புப்பணியில் சிறப்பாக செயல்பட்ட தீயணைப்புப் படையைச் சேர்ந்த இருவருக்கு அண்ணா வீரதீர பதக்கம் வழங்கப்படுவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் நடப்பு ஆண்டில் 40 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாநில உணவு மற்றும் கூட்டுறவத்துறை முதன்மை செயலாளர் டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் மருங்குளத்தில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை இன்று ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் இம்மாதத்தில் 83 ஆயிரத்து 152 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்.

*( சவுண்ட்பைட் - ராதாகிருஷ்ணன் ) -50-- செகண்ட்*

**[]<<<>>>[]**

பணிகளில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் மாநில அரசு துறைகளில் நடப்பு ஆண்டில் இதுவரை பத்தாயிரத்து 315 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் திரு திரு எஸ் கே பிரபாகர் தெரிவித்துள்ளார்.

இன்று சென்னை எழும்பூரில் டி என் பி எஸ் சி –குரூப்-இரண்டு தேர்வு நடைபெற்ற மையத்தை ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த ஆண்டு திட்டமிட்டபடி அனைத்து தேர்வுகளும் நடத்தப்படும் என்றார்.

*( சவுண்ட்பைட் - பிரபாகர் ) ---39 செகண்ட்*

**[]<<<>>>[]**

சென்னை மெரினா கடற்கரையில் உள்ள நீச்சல் குளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பராமரிப்பு பணிகளை மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு கே என் நேரு இன்று ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

திருப்பத்தூர் மாவட்டத்தில் 208 கிராம ஊராட்சிகளிலும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாவட்ட அளவிலான சிறு தானியங்கள் மற்றும் பாரம்பரிய உணவு திருவிழா போட்டிகள் நடத்தப்பட உள்ளதாக ஆட்சியர் திரு தர்ப்பகராஜ் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

புதுக்கோட்டை மாவட்டத்தில் 75 சதவீதம் மானியத்தில் சிறு தானிய மதிப்புக்கூட்டு எந்திரங்கள் வழங்கப்படுவதாகவும், இதனை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட வேளாண்துறை தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள நெகிழி மறுசுழற்சி ஆலையை மாநகராட்சி அதிகாரிகள் இன்று ஆய்வு செய்தனர்.

**[]<<<>>>[]**

ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை வென்றது.

சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா இரண்டு – ஒன்று என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானை வென்றது.

**[]<<<>>>[]**

துனிஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண்சிங் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*End of News*